DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : முருகேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 01.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st **August 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செந்தட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு நான் ரைஸ் மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன். 4 நாட்கள் தொடர்ந்து வேலை செய்துவிட்டு 5 வது நாள் வீட்டிற்கு வந்து எனது வீட்டிற்குள் படுத்து தூங்கிக்கொணடிருந்தேன். மறுநாள் காலை 5.00 மணிக்கு எழுந்து பார்த்தபோது நான் வீட்டிற்குள் தொங்கவிட்டிருந்த சட்டையிலிருந்து ரூ.670/– காணவில்லை. எனது வீட்டு மாடியிலிருந்து எனது வீட்டிற்குள் வந்துவிடலாம். உடனே நானும் எனது மனைவியும் வீட்டிற்குள் இருந்து பிரோவை பார்த்தபோது பிரோ திறந்து கிடந்தது. பிரோவில் வைத்திருந்து 18 பவுன் நகையை காணவில்லை. தலா 5 பவுன் கொண்ட 2 செயின்கள், 4 பவுன் எடை கொண்ட

ஒரு செயின், நெக்லஸ் 2 ½ பவுன், சப்பை மாடல் செயின் 1 ½ பவுன் ஆகியவற்றை காணவில்லை. நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 1 வருடம் கழித்து காவல்நிலையத்திற்கு போலிசார் என்னை வரசொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்று காணாமல் போன எனது நகைகளை அடையாளம் காண்பித்து பின்னர் நீதிமன்றம் மூலமாக பெற்றுசென்றேன். என்னிடம் காட்டப்படும் 5 புகைப்படங்களில் உள்ள நகைகள் காணாமல் போன எங்களுக்கு சொந்தமான நகைகள்தான். **அந்த புகைப்படங்கள் 5 எண்ணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 5 பவுன் **எடையுள்ள 2 வட செயின் ஒன்று சா.பொ.1 ஆகவும், 4 பவுன் எடையுள்ள முறுக்கு செயின் ஒன்று சா.பொ.2 ஆகவும், 2 ½ பவுன் எடையுள்ள ஐஸ்வர்யா நெக்லஸ் ஒன்று சா.பொ.3 ஆகவும், 1 ½ பவுன் எடையுள்ள சப்பை மாடல் செயின் ஒன்று சா.பொ.4 ஆகவும், 5 பவுன் எடையுள்ள டாலர் செயின் ஒன்று சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசார்த்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது ஊர் செந்தட்டியிலிருந்து சின்னகோவிலான்குளத்தில் 15 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நகைகள் மற்றும் பணம் காணமல் போனதை கண்டுபிடித்த பிறகு எப்போது போய் போலிஸில் புகார் மனு அளித்தேன் என்றால் கண்டுபிடித்த நாள் அன்று காலை 11.00 மணியளவில் போலிசாரிடம் புகார் மனு அளித்தேன். புகார் மனுவில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் மனுவில் உள்ள விபரங்களை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் நான் சொல்ல போலிசார் எழுதிக் கொடுத்தார்கள். புகார் மனுவை யார் எழுதி கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சா.பொ.1 முதல்

சா.பொ.5 வரையிலான நகைகளில் எந்த நகை என்னுடையது என்றால் சா.பொ.2, சா.பொ.3 மற்றும் சா.பொ.4 நகைகள் என்னுடையது. சா.பொ.1 நகை எனது அக்கா மூக்கம்மாள் உடையது. சா.பொ.5 நகை எனது மதினி புஷ்பா என்பவருடையது. நகை காணாமல்போன விபரத்தை மேற்படி புஷ்பா மற்றும் மூக்கம்மாள் ஆகியோரிடம் தெரிவித்தேனா என்றால் கூறினேன். மேற்படி மேற்படி புஷ்பா மற்றும் மூக்கம்மாள் ஆகியோர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் போலிசார் விசார்த்தார்கள். நான் கூறிய நாள் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. எனது வீட்டின் மேலே உள்ள கதவு மற்றும் கீழே உள்ள கதவு ஆகியவை உடைக்கபபட்டிருந்ததா என்றால் இல்லை. மேலே உள்ள கதவை நாங்கள் பூட்டாமல் துாங்கிவிட்டோம். காணாமல் போன நகைகளை வைத்திருந்த பீரோ உடைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. போலிசாரிடம் சம்பவம் குறித்து நான் புகார் மனு அளித்த பிறகு கைரேகை நிபுணர்கள் யாரேனும் எனது வீட்டிற்கு வந்து ஆய்வு செய்தார்களா என்றால் வந்து ஆய்வு செய்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்கள் பொய் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : வாசுகி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 01.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st **August 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செந்தட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடத்திற்கு முன்பு நானும் எனது கணவரும் எனது வீட்டிற்குள் படுத்து துாங்கிக்கொணடிருந்தேன். மறுநாள் காலை 5.00 – 5.30 மணியளவில் எனது கணவர் வீட்டிற்குள் தொங்கவிட்டிருந்த சட்டையை பார்த்த போது அதிலிருந்த ரூ.670/– காணவில்லை. எனது வீட்டு மாடியிலிருந்து எனது வீட்டிற்குள் வந்துவிடலாம். உடனே நானும் எனது கணவரும் வீட்டிற்குள் இருந்து பிரோவை பார்த்தபோது பிரோ திறந்து கிடந்தது. பிரோவில் வைத்திருந்து 18 பவுன் நகையை காணவில்லை. தலா 5 பவுன் கொண்ட 2 செயின்கள், 4 பவுன் எடை கொண்ட ஒரு செயின், நெக்லஸ் 2 ½ பவுன், சப்பை மாடல் செயின் 1 ½ பவுன்

ஆகியவற்றை காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம். நகை கிடைக்கவில்லை. அதன்பின்னர் எனது கணவர் சின்னகோவிலான்குளம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். புகார் அளித்து கொஞ்ச நாட்களுக்கு பிறகு காவல்நிலையத்திற்கு போலிசார் எனது கணவரை வரசொன்னார்கள். எனது கணவர் காவல்நிலையம் சென்று காணாமல் போன எனது நகைகளை அடையாளம் காண்பித்து பின்னர் நீதிமன்றம் மூலமாக பெற்றுகொண்டோம். போலிசார் என்னை விசார்த்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.